துணை கண்காணிப்பாளர் அலுவலகம் திறக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைகளைக் கருத்தில் கொண்டுதான் அவற்றை யோசிக்க இயலும்.

திரு. வ, முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப, அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்திடும் வகையில், காவல் நிலையங்களில் காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்திடவும், ரெகுலர் மற்றும் கலால் பிரிவுகளை ஒன்றாக்கிடவும் முதல்வர் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்து; யோசிக்கப்படும்.

திரு. எம். முத்தையன்: தலைவர் அவர்களே, கல்ராயன் மலையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவு சுற்றுவட்டாரத்தில், போலீஸ் ஸ்டேஷன் கிடையாது. சரியான தொடர்பே இல்லை. அதனாலே, ஏகப்பட்ட சிக்கல், தகராறு, வம்புதும்பு இவையெல்லாம் போலீஸ் காதுக்கே சரியாக வருவதில்லை. கல்ராயன் மலையில் ஏற்கனவே போலீஸ் ஸ்டேஷன் இருந்தது. அதை எடுத்து விட்டார்கள். எனவே, மறுபடியும் அங்கே போலீஸ் ஸ்டேஷன் வைப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற கோரிக்கைகளை இன்னொருவருடைய கேள்வியில் புகுந்துகொண்டு எழுப்பாமல், நேரடியாக அரசுக்கு எழுப்பினால் கவனிக்கப்படும்.

திருவண்ணாமலைக்கு அருகில் இரும்பு கண்டுபிடிப்பு

*5555 திரு. பெ. சு. திருவேங்கடம்:

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவண்ணாமலைக்கு அருகில் இரும்பு இருப்பதாக ஜப்பான் நிபுணர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) அதன் முடிவு என்ன?

1990 மார்ச் 20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே,

(அ) (ஆ) மற்றும் (இ) அவைமுன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

(அ) ஆம்

(ஆ) மற்றும் (இ):

1967 மற்றும் 1975 ஆம் ஆண்டுகளுக்கிடையில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தர்மபுரி மாவட்டப் பகுதிகளில் கனிம வளர்ச்சித் திட்டம் நடைபெற்று வந்தது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக கனிம படிவ அமைப்புகளைக் கண்டறிய கூட்டு ஆய்வு முறைகளான புவிபௌதீகம், புவிஇரசாயனம், புகைப்பட புவியியல், தாது பிரித்தெடுக்கும் நுண்முறைகள் முதலியன மேற்கொள்ளப் பட்டன. தற்போதைய திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில், திருவண்ணாமலைக்கு அருகில் கவுதிமலை மற்றும் வேடியப்பமலை குன்றுத் தொடர்களில் இரும்புத்தாது அமைந்திருப்பது மேற்குறித்த வளர்ச்சித் திட்டத்தின் முதல் நிலையிலேயே கண்டறியப்பட்டது. இங்கு காணப்படும் இரும்புத் தாது மாக்னடைட்-குவார்ட்ஸைட் வகையைச் சார்ந்தது. இரும்புச் சத்து 37—41 விழுக்காடுகள் உள்ளது. இதன் சராசரி அளவு 38 விழுக்காடுகளாகும்.

திருவாளர்கள் மருபானி கார்ப்பரேஷன் என்ற ஜப்பானிய நிறுவனம் இங்கு காணப்படும் இரும்புத்தாதுவினை வெட்டியெடுப்பதில் கவனம் செலுத்தியது. இதற்கென 1972 ஆம் ஆண்டில் தனது புவியியல் வல்லுநர்களை மாதிரிகள் சேகரிப்பதற்கென இப்பகுதிக்கு அனுப்பி வைத்தது.

திருவாளர்கள் மருபானி கார்ப்பரேஷன் இங்கு காணப்படும் இரும்புத்தாதுவில் இருந்து பெரிய அளவில் காணப்படும் உயர்ந்த இரும்புச் சத்துக்கொண்ட தாதுவை மட்டும் வெட்டியெடுத்து பிற நாடுகளிலிருந்து பெறப்படும் தாம் குறைந்த இரும்புத்தாதுவுடன் கலந்து உபயோகிப்பதிலேயே ஆர்வம் காட்டியது. இவ்வாறு இந்நிறுவனம் உயர்தரம் கொண்ட தாதுவினை மட்டுமே பயன்படுத்த எண்ணியதால் தரம் குறைந்த தாது பயன்படுத்தப்படாமல் தங்கிவிடும் நிலையைக் கருத்தில் கொண்டு மாநில அரசு இதில் தொடர்ந்து ஈடுபாடு காட்டவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, 1972 ஆம் ஆண்டு திருவண்ணாமலை அருகில் கௌத்திமலை,

வேடியப்பன்மலை பகுதிகளில் - ஜப்பானிய நிறுவனம் ஆய்வு செய்ததில், இரும்புத் தாது அமைந்துள்ளது எனவும், இரும்புச் சத்து சராசரி 38 விழுக்காடு உள்ளது எனவும் புவியியல் வல்லுநர்கள் ஆய்வில் தெரிவித்துள்ளதாக அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. இங்கு கிடைக்கும் உயர்ந்த இரும்புச் சத்தைப் பயன்படுத்தி, திருவண்ணாமலைப் பகுதியில் இரும்பு ஆலை அமைக்க நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, வட நாட்டிலே உள்ள பகுதிகளில் இந்த விழுக்காடு, இரும்புச் சத்து, 60 என்கின்ற அளவில் இருக்கின்ற காரணத்தால் வடநாட்டிலே பெரும் அளவில் அந்தத் தொழில் இன்றைக்கு நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இங்கே திருவண்ணாமலைப் பகுதியில் கிடைக்கின்ற இரும்பு, குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பதைப்போல 30 அல்லது 35 என்கின்ற அளவுக்கு இருக்கின்ற காரணத்தினால் சராசரி, அளவு 38 விழுக்காடுகள் என்று இருக்கின்ற காரணத்தினால் இதன்மூலம் நம்முடைய தேவைகளை நிறைவு செய்ய முடியுமா என்கின்ற சந்தேகம் இருக்கிறது. இருந்தபோதிலும், ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது. நடைபெற்றாலும்கூட, மத்திய அரசின் சார்பாகத்தான் இந்தத் தொழிலை நாம் மேற்கொள்ளமுடியுமே அல்லாமல், மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள இயலாது. ஆகவே, இதுகுறித்து மத்திய அரசோடு தொடர்புகொள்ளப் படும்.

9-05 மணி

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, பண்டைய வரலாற்றில் திருவண்ணாமலையிலே இந்த இரும்பு மண் எடுத்து கடலூரிலே இரும்பு தயாரித்ததாகச் சொல்லப்படுகிறது. அந்த அளவில் நல்ல இரும்பு கிடைக்கின்ற வாய்ப்பும் அங்கே உள்ளது என ஏற்கெனவே அந்தப் பகுதி மக்களும் சொல்கிறார்கள். அந்தப் பகுதி, திருவண்ணாமலை, செங்கம், கலசப்பாக்கம் தொகுதிகள் அடங்கிய பகுதியாகும். திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் தொழிலிலே மிகவும் பின் தங்கியிருக்கின்ற காரணத்தினாலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு முன்னுரிமை அளித்து மத்திய அரசை வற்புறுத்துவார்களா என்று நான் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, கவுதிமலையிலே 20 மில்லியன் டன்னும், வேடியப்பன் மலையிலே 42 மில்லியன் டன்னும், நான் முதலிலே குறிப்பிட்ட இந்த இரும்பு கிடைக்கக் கூடும் என்று கணக்கிடப்பட்டு இருக்கின்றது, ஆனால் அது

சத்து குறைந்த தரமுள்ள நிலையிலே இருக்கின்ற காரணத்தால் அதை நல்ல தரமுள்ளதாக ஆக்குவதற்கு என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைக் கண்டறியவும், அந்த இரும்பைப் பயன் படுத்துவதற்கு மத்திய அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளவும் மாநில அரசு தயங்காது.

திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருகிலே உள்ள கவுத்தி மற்றும் வேடியப்பன் குன்றுகளில் காணப்படும் இரும்புத் தாதுவை எடுத்து தனியாக ஒரு இரும்புத் தொழிற்சாலை துவங்காவிட்டாலும், சேலம் உருக்காலைத் திட்டத்துடனாவது இணைத்து அந்த இரும்பினை உபயோகப்படுத்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சேலம் ஆலையையே, உருட்டாலையாக இருப்பதை உருக்காலையாக மாற்ற வேண்டும் என்று இன்றைய தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. அப்படி ஒருநிலை ஏற்படும் போது இந்தக் கேள்வியின் அடிப்படையிலே எழுந்துள்ள கருத்துக்கள் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் படும்.

மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை.

*4105 திரு. கே. ரமணி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் தாலுக்கா மேலநீலிதநல்லூரில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, பசும்பொன் நேத்தாஜீ பாலிடெக்னிக் ஆகிய கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அரசு கொடுக்கிற உதவித் தொகையை மாணவர்களுக்குக் கொடுக்காமல் ஏமாற்றி வருவது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, கல்லூரி பற்றி ஏதும் புகார் வரவில்லை.

(அ) பசும்பொன் நேத்தாஜீ பாலிடெக்னிக் மீது மேற் கூறிய புகார் தவிர மேலும் சில புகார்கள் பெறப்பட்டன.

(ஆ) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 1989-90 ஆண்டிற்கான சேர்க்கையை நிறுத்த ஆணையிடப்பட்டது.